# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 29, 2021

Weekly E-paper ● December 29, 2021




# கருஞ்சட்டைகள் கைகோக்கட்டும்

எழில்.இளங்கோவன்

## உளப்பூர்வமாக இணைகிறோம்!

கா.சு.நாகராஜ்

## நாவலருக்கு முதல்வரின் மரியாதை

தலையங்கம்

## இந்த இணைவு காலத்தின் தேவை!

வெண்மணி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 29, 2021 Weekly E-paper ● December 29, 2021


# கருஞ்சட்டைகள் கைகோக்கட்டும்

**எழில்.இளங்கோவன்**

திராவிட இயக்கத் தமிழர் பேரவையில், தமிழ்நாடு திராவிடர் கழகம் ஒன்றிணைவது வரவேற்புக்கும், மகிழ்ச்சிக்கும் உரியதாகும்.

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டில் திராவிடர் இயக்கம் தோன்றியபோது தமிழர்கள் பெரும் நெருக்கடிகளுக்குள் இருந்தார்கள். ஏறத்தாழ இன்றைய சூழலும் அப்படித்தான் இருக்கிறது.

தமிழ்நாட்டில் மக்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒரு வகையினர் பார்ப்பனர், மற்றவர் பார்ப்பனரல்லாதார்.



பார்ப்பனரல்லாதாரில் பிற்படுத்தப் பட்டவர்கள், பட்டியலினத்தவர்கள், கிறித்துவர்கள், இஸ்லாமியர்கள் எல்லோரும் அடங்குவார்கள். இவர்கள் மக்கள் தொகையில் 97 விழுக்காடு இருக்கிறார்கள்.

மூன்று விழுக்காடு மட்டுமே இருக்கக்கூடிய பார்ப்பனர்கள், 97 விழுக்காடு இருக்கக்கூடிய பார்ப்பனர் அல்லாதவர்களைக் கடந்த காலங்களில் அரசியல் அதிகாரத்தைக் கொண்டு அடக்கி வந்தார்கள்.

சாதி, மத, மூட நம்பிக்கை இவைகளைக் கொண்டு மக்களிடையே வேற்றுமைகளை வளர்ப்பதும், அதற்குக் கலவரங்களைத் தூண்டுவதும் பார்ப்பனிய அரசியலாக இருக்கிறது.

திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் உருவெடுத்த பின்னர் பார்ப்பனரல்லாத மக்களுக்கான அரசியலை அது முன்னெடுத்தது.

தந்தை பெரியார் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தை உருவாக்கிய பின்னர் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்து பெரியாரின் பின்னால் அணிவகுக்கத் தொடங்கினார்கள்.

அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பட்டுக்கோட்டை அழகிரி உள்ளிட்ட தலைவர்களின் பேச்சுகளும், செயல்பாடுகளும், போராட்டங்களும் மக்களுக்குத் தன்னம்பிகையை ஊட்டின.

சாதி ஒழிய வேண்டும், பெண்களின் அடிமைத்தனம் நீங்கி அவர்கள் விடுதலை பெற வேண்டும். அன்றைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்ற இடஒதுக்கீடு என்ற பெரியாரியச் சிந்தனைகள் இளைஞர்கள் மத்தியில் வேரூன்றி, தமிழ்நாட்டைப் பெரியார் மண் ஆக்கியிருக்கிறார்கள் இன்று, அவர்கள்.

இத்தகைய சூழலில் ராஷ்டிரிய சுயம் சேவக் என்ற ஆர்.எஸ்.எஸ் அமைப்பு, வருணங்களாகப் பிரிந்துள்ள மக்களை இன்று இந்துக்கள் என்று சொல்லி அணி திரட்ட முயல்கிறது. அதற்கான அரசியல் அமைப்பான பாஜகவைத் தமிழ்நாட்டில் நுழைக்கும் வேலையைச் செய்துகொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையிலான திராவிட இயக்கத் தமிழர் பேரவையில், தோழர் கா.சு.நாகராசன் தலைமையிலான தமிழ்நாடு திராவிடர் கழகம் ஒன்றிணைகிறது.

இந்த இரண்டு இயக்கங்களுக்கும் தந்தை பெரியாரும் அவரது கொள்கைகளும் தலைமையாக இருக்கிறது. மதவாத அரசியலை எதிர்ப்பது, திராவிட அரசியலை இந்த மண்ணில் நிலைநிறுத்துவது என்ற கொள்கையில் இணைந்திருக்கிறது இந்த இரண்டு இயக்கங்கள்.

இதுவரை களத்தில் நின்று மக்களுக்காகப் பணியாற்றிய திராவிட இயக்கத் தமிழர் பேரவையில், தமிழ்நாடு திராவிடர் கழகம் இணைந்து ஒரே தலைமையின் கீழ் பணியாற்றுவது காலத்தின் தேவையாகும். சுருங்கச் சொன்னால் கருஞ்சட்டைகள் இணைகின்றன, கோவையில்.

கருஞ்சட்டைகள் கைகோக்கட்டும்.

## திராவிட இயக்கத் தமிழர் பேரவையில் தமிழ்நாடு திராவிடர் கழகம் இணையும் சிறப்பு மலர்




# உளப்பூர்வமாக இணைகிறோம்!

**தோழர் கா.சு.நாகராசன், தலைவர், தமிழ்நாடு திராவிடர் கழகம்**

பேராசிரியர் சுபவீ அவர்கள் தலைமையில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை என்ற அமைப்பு இயங்கிக் கொண்டிருக்கிறது. சமூகத்தில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு, அடுத்து வளர்கிற தலைமுறைக்கு, திராவிடப்பள்ளி, கருஞ்சட்டைப் பதிப்பகம் போன்ற துணை நிறுவனங்கள் மூலமாகத் தொடர்ச்சியாகத் திராவிட இயக்கக் கொள்கைகளைக் கற்றுக்கொடுக்கும் பெரும் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தமிழ்நாடு திராவிடர் கழகம் என்ற பெயரில் ஒரு குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தோழர்களோடு, அதே பெரியாரியல் கொள்கைகளை, திராவிட இயக்கக் கொள்கைகளை இளைஞர்கள் மாணவர்களிடம் தொடர்ச்சியான பிரச்சாரமாகச் செய்து கொண்டிருக்கிறோம்.

இப்போது இருக்கிற ஒரு சமூக அரசியல் சூழல் எப்படி இருக்கிறதென்றால், திராவிட இயக்கக் கருத்துகளைச் சித்தாந்த ரீதியாக இளைய தலைமுறைகளிடத்தில் அந்நியப்படுத்தும் வேலையைச் சங்பரிவார் ஆர்எஸ்எஸ் கும்பல் நீண்ட காலமாகத் தொலைநோக்குடன் செய்துகொண்டிருக்கிறார்கள். இரண்டு தளங்களில் அவர்கள் இயங்குகிறார்கள். ஒருபக்கம் சமூகத் தளத்தில் திராவிட இயக்கம் ஏற்படுத்தியத் தாக்கத்தை, எழுச்சியை எதிர்த்து, எதிர்க்கருத்தைப் பதிவு செய்கிற வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற, வேகம் காட்டாமல் மிகவும் நிதானமாக, அதே நேரத்தில் மிகவும் அழுத்தமான முயற்சியைப் பார்ப்பனர்கள் ஆர்எஸ்எஸ் மூலமாக எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.


கா.சு.நாகராஜ்

இந்தச் சூழ்நிலையில் பெரியாரியலை, திராவிட இயக்கக் கருத்துகளை வருகிற இளம் தலைமுறையிடம் எடுத்துச் சொல்லும் பணியில் நாம் மிகப் பலவீனமாக இருக்கிறோம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். எதிரி எப்படி வேகமாகச் செயல்படுகிறானோ, அதற்குக் கொஞ்சமும் குறையாமல் அதைவிட வேகமாக நாம் இளைஞர்களிடம் திராவிட இயக்கச் சித்தாந்தங்களை, கொள்கைகளை, கோட்பாடுகளை இந்த மண்ணில் நடந்தப் புரட்சிகளை, போராட்டங்களைச் சொல்ல வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன். அதற்கு வலிமை என்பது மிக முக்கியமாகும்.

பேராசிரியர் அண்ணன் சுபவீ அவர்களுடைய வழிகாட்டலில் தமிழ்நாடு முழுவதும், அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து நகர ஒன்றியப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய இளைஞர்களிடமும் மாணவர்களிடமும் சென்று திண்ணைப் பிரச்சாரங்கள், தெருமுனைப் பிரச்சாரங்கள் என்கிற நம்முடைய மரபு வழிகளில் திராவிட இயக்கக் கொள்கைகளையும் கருத்துகளையும் கொண்டுபோய்ச் சேர்ப்பது; இன்னொரு பக்கம் வளர்ந்திருக்கிற அறிவியலின் வழியாக சமூக வலைத்தளங்களில் முழுமையாகப் பெரியாரைக் கொண்டு போய்ச் சேர்ப்பது; தி.மு. கழகத்தின் ஆட்சிப் பணிகளைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது என்கிற வேலைத் திட்டத்தோடு தமிழ்நாடு திராவிடர் கழகம் உளப்பூர்வமாக திராவிட இயக்கத் தமிழர் பேரவையில் தன்னை முழுமையாக இணைத்துக் கொள்கிறது.

- மா.உதயகுமார்

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## நாவலருக்கு முதல்வரின் மரியாதை



சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகையில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சிலையை, 26 - 12 - 2021 அன்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துள்ளார்.

"தலை சிறந்த பகுத்தறிவுவாதிகளில் ஒருவர், எனக்கே பாடம் கற்றுத் தரும் அளவுக்குத் தகுதி வாய்ந்தவர் நாவலர்!" என்று தந்தை பெரியாராலும்.....

" தம்பி வா, தலைமை ஏற்க வா, நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்லவரே, நாவலரே!" என்று அறிஞர் அண்ணாவாலும்.......

"நடைமிடுக்கும், நகைச்சுவை எடுப்பும், நற்றமிழ் பேச்சால் நாட்டோரைக் கவர்ந்திழுக்கும், நாவன்மை மிக்க நாவலரே!" என்று தலைவர் கலைஞராலும் பாராட்டப் பெற்றவர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, இவரோடு பயின்ற பேராசிரியர் அன்பழகன் அவர்களுடன் சுயமரியாதைக் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு 1944இல் திராவிடர் கழகத்தில் இணைந்து, பின் 1949 ஆம் ஆண்டு அண்ணாவுடன் தி.மு.கழகத்தில் சேர்ந்தார்.

கழகத்தின் பிரச்சாரக் குழுத் தலைவராகவும், பொதுச் செயலாளராகவும், 1967 இல் அண்ணா அமைச்சரவையிலும், பின்னர் கலைஞர் அமைச்சரவையிலும் கல்வியமைச்சராக இருந்து செயல்பட்டவர் நாவலர்.

சிறந்த இலக்கியவாதியாகவும், இயக்கவாதியாகவும், எழுத்தாளர், பேச்சாளர், இதழாளர் என்ற பன்முகத் தன்மை கொண்ட நாவலரின் சிலையை இன்றைய கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தன்கரங்களால் திறந்து வைத்திருப்பது மிகவும் பெருமைக்கு உரியதாகும்.

காரணம் நாவலர் மறையும் போது அவர் தி.மு.கழகத்தில் இல்லை; அதற்காக முதல்வர் அவரைப் புறக்கணிக்கவும் இல்லை !

## கவிக்கோ விருது



*21-12-2021 அன்று வேலூரில் பாடலாசிரியர் பழனிபாரதிக்கு, 'கவிக்கோ விருது' வழங்கி பாராட்டப்பட்ட விழாவில் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.*

## அண்ணா தமிழ்க் கழக விழா



*27-12-2021 அன்று காரைக்குடியில் PLP பேலசில் நடைபெற்ற அண்ணா தமிழ்க் கழகத்தின் 49ஆவது ஆண்டு விழாவில், பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.*

## A4 மருத்துவமனை திறப்புவிழா



*26-12-2021 அன்று தாம்பரத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட A4 மருத்துவமனை திறப்பு விழாவில் மருத்துவர் அசோக், மருத்துவர் அருணா, 'பெல்' ராஜன், பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், எழில்.இளங்கோவன், ஆ.சிங்கராயர், மகாலட்சுமி, செல்வின், மு.மாறன், எழுத்தாளர் உமா, முத்தையா குமரன், கண்ணன், இளமாறன், இளங்கோ, மோகன் உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.*

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# இந்த இணைவு காலத்தின் தேவை!

**தோழர் வெண்மணி – தலைவர், திராவிடத் தமிழர் கட்சி**

மனித சமூகத்தைச் சாதியின் பெயராலும் மதத்தின் பெயராலும் பிளவு படுத்துகிற பாசிச மதவாத ஒன்றிய அரசின் ஆட்சியில் இருக்கக் கூடிய இந்தச் சூழலில், தந்தை பெரியாரின் வழி நின்று சமத்துவம் மற்றும் சமூக நீதிக்காக போராடுகின்ற அமைப்புகளெல்லாம், ஒருங்கிணைந்து செயல்படவேண்டிய காலகட்டத்தில் தமிழ்ச் சமூகம் உள்ளது.



வெண்மணி

சமூக நீதிக்கான தவறான விளக்கங்களை சீமான், மணியரசன் போன்றோர் இன்றைய இளைஞர்களிடம் புகுத்திக்கொண்டிருக்கிறார்கள். தமிழர் தலை நிமிரக் காரணமான தந்தை பெரியாரையே தமிழர் இல்லை என்று அவதூறுகளைச் சீமான் பரப்புகிறார். தமிழர்களின் சிந்தனையை மடைமாற்ற ‘தமிழ் இந்து’ போன்ற ‘அரிய’ தத்துவக் குழப்பங்களை மணியரசன் ஏற்படுத்துகிறார். சங்கிகளாகவே மாறிய இவர்கள் எடுக்கும் பரப்புரைகளை எச்.ராஜா போன்றவர்கள் வழிமொழிகிறார்கள்.

இந்தச் சூழலில், தந்தை பெரியாரையும் புரட்சியாளர் அம்பேத்கரையும் நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டியக் கட்டாயம் உருவாகி உள்ளது.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை கடந்த காலத்தில் அறிவுத்தளத்தில் பல்வேறு கருத்துருவாக்கங்களைச் செய்துள்ளது. பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களுடைய தலைமையில் சமூகத் தளத்தில் சமரசமின்றித் தொடர்ந்து போராடிக்கொண்டும், செயல்பட்டுக்கொண்டும் இருக்கிறது. தமிழ்நாடு திராவிடர் கழகம் துடிப்புமிக்க இளைஞர் படையோடு திராவிடக் கோட்பாடுகளை முன்னிறுத்தி கா.சு.நாகராசன் அவர்களுடைய தலைமையில் மேற்கு மண்டலத்தில் இயங்கி வருகிறது. இந்த இரு அமைப்புகளும் இணைவது என்பது உள்ளபடியே ஒரு பெரும் மகிழ்ச்சிக்குரிய செய்தி.

சமூக நீதிக்கு எதிராக சங் பரிவார அமைப்புகள் பல்வேறு தளங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இட ஒதுக்கீட்டைப் பற்றிய புரிதல் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களிடையே இல்லை. ஒன்றிய அரசு இதுவரை 8% பட்டியலின ஒதுக்கீட்டையும் 12% பிற்படுத்தப்பட்ட ஒதுக்கீட்டையுமே நிறைவேற்றி உள்ளது. இன்னும் 80% வேலை வாய்ப்புகள், உயர்கல்வி, அதிகாரப் பகிர்வு பார்ப்பனியர் வசமே உள்ளன. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியத் தேவை உள்ளது.

பெரும் மூளை பலமும் மனித பலமும் உள்ள அமைப்பே இவற்றைச் செய்து முடிக்க முடியும். இது காலத்தின் தேவை. இந்த இணைப்பு ஒரு முன்னோட்டமே. இன்னும் பல பெரியாரிய அம்பேத்கரிய அமைப்புகள் தயக்கமின்றி இணைய வேண்டும். இம்மண்ணில் சமூக நீதியும் சமத்துவமும் தழைக்கச் செய்யவேண்டும்.

அதனால், திராவிட இயக்கத் தமிழர் பேரவையில், தமிழ்நாடு திராவிடர் கழகம் இணைவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

**- சாரதாதேவி**

ஆரியத்தால் வீழ்ந்தோம் திராவிடத்தால் எழுந்தோம்

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**




கருஞ்சட்டைத் தமிழர் மின்னிதழ் திராவிடப்பள்ளி திராவிடம்100

JANUARY / ஜனவரி 2022

| SUNDAY ஞாயிறு | MONDAY திங்கள் | TUESDAY செவ்வாய் | WEDNESDAY புதன் | THURSDAY வியாழன் | FRIDAY வெள்ளி | SATURDAY சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

தலைமை அலுவலகம்
120/131, என்.டி.ஆர். தெரு, ரங்கராசபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024. தொலைபேசி: 044 - 24726408

## நூல்வெளியீடு



24.12.2021 அன்று அண்ணாநகரில் உள்ள சாதிக் ஐ.ஏ.எஸ் அகாடமியில் பேரவையின் தோழர்கள் வெற்றிச்செல்வன் – உதயகுமார் இணைந்து எழுதிய “ஏன் பெரியார் மதங்களின் விரோதி?” நூலை திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி வெளியிட, பேராசிரியர் சுப.வீரபாண்டியன் பெற்றுக்கொண்டார். உடன் தோழர்கள் இராகிலா, உதயகுமார், ஜெயசூர். நூல்வெளியீட்டு விழாவைப் பேரவையின் சென்னை மாவட்டமும், கருஞ்சட்டைப் பதிப்பகமும் இணைந்து நடத்தின.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian